




RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் நவம்பர் 03 * 2025 * மலர் -1 * இதழ்-154 * VOL-1 * ISSUE-154 விலை ரூ.3 * பக்கம் -4




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காரப்பாக்கத்தில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் கட்டுமான பணிகள் நடைபெறும் பகுதியில், ஒக்கியம் மடுவு கால்வாயில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக கரைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளதையும், நீர் தடை இன்றி செல்வதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு மனிதவளமேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் திருப்பூர் மாவட்டம். கணியூர் ஸ்ரீ வெங்கட கிருஷ்ணா மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நலப்பெட்டகங்களை வழங்கினார்கள். உடன் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி அவர்கள், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன். உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார், கணியூர் பேரூராட்சி தலைவர் செந்தமிழ் செல்வி ஆகியோர் உள்ளனர்.

### வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்:

# ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம்!

## விஜய், சீமான், ராமதாஸ் புறக்கணிப்பு!!

சென்னை, நவ. 3

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்த அனைத்துக் கட்சிக் கூட்டம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ளாமல் விஜய், சீமான், மற்றும் டாக்டர் ராமதாஸ் ஆகியோர் புறக்கணித்தனர்.

பீகாரில் இம்மாதம் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் அங்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்றன. அப்போது ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பல லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் இருந்ததும், வேறு மாநிலங்களுக்கு நிரந்தரமாக குடியேறியவர்களின் பெயர்கள் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட மொத்தம் 65 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

அதைத்தொடர்ந்து 2–ஆம் கட்டமாக தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி உள்ளிட்ட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற உள்ளன. அதற்கான அட்டவணையை தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ளது.

அதன்படி தமிழ்நாட்டில் வீடு வீடாக வாக்காளர் கணக்கெடுப்பு படிவம் கொடுக்கும் பணி வருகிற 4–ஆம் தேதி தொடங்கி டிசம்பர் 4–ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் நவம்பர் 4–ஆம் தேதி முதல் தீவிர வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம் பணிகள் தொடங்க உள்ளன.

இதற்கு தி.மு.க., காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

வாக்காளர் பட்டியல் திருத்தம் மூலம் தமிழ்நாட்டில் ஆட்சியை பிடிக்க பா.ஜ.க. முயற்சிக்கிறது என தெரிவிக்கின்றனர்.

ஆனால் அ.தி.மு.க., பா.ஜ.க உள்பட தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகள் இதற்கு வரவேற்பு தெரிவித்துள்ளன. இந்நிலையில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிக்கு எதிரான அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்று காலை சென்னை தியாகராய நகரில் உள்ள அகார்டு ஓட்டலில் நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

இந்த கூட்டத்தில் பங்கேற்க 60 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்றனர்.

ஆனால் இதில் விஜயின் த.வெ.க., பா.ம.க., மற்றும் நாம் தமிழர் கட்சி கலந்து கொள்ளாமல் புறக்கணித்தன. அதே நேரத்தில் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கவில்லை.



சென்னையில், கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு (S.I.R) எதிராக போராடிட அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், கொங்கு மக்கள் தேசியக் கட்சியின் தலைவர் ஈ.ஆர். ஈ.ஆர். ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன், மனிதநேய மக்க மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா உள்ளிட்ட ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், கழக முதன்மைச் செயலாளரும், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் கலந்துகொண்டனர்.






கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம். அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேக பெருவிழா முன் ஏற்பாடுகள் குறித்து கள்ளக்குறிச்சி மாவட்ட கழக செயலாளர் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் B.SC MLA ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்த அறிவுறுத்தல் கூறினார். அவருடன் கள்ளக்குறிச்சி மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் ஆர் ரமேஷ் அவர்கள் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர் .R. பாக்யராஜ் , கீழையூர் செயல் அலுவலர் , R.ராஜாத்தி அவர்கள் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் உடன் இருந்தனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தொகுதி எலவனாசூர் கோட்டையில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் இன்று பாரத் மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்த முகாமினை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் அவர்கள் மற்றும் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி முகாமை துவக்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் உளுந்தூர்பேட்டை நகராட்சி தலைவர் திருநாவுக்கரசு, மாவட்ட சுகாதார ஆய்வாளர் ராஜா,வட்டாரமருத்துவஅலுவலர்தேன்மொழி,ஊராட்சிமன்றதலைவர்நந்தகுமார்,துணைத்தலைவர் ஷம்சாத், மாவட்ட கவுன்சிலர் ப்ரியா பாண்டியன், பள்ளி நிர்வாகி சிராஜுதீன், உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள், சுகாதாரத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு 500க்கும் மேற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து உரிய மருந்துகளை வழங்கினர்.

# கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு பா.ஜ.க.வினர் போராட்டம்!



கொடைக்கானல்,நவ.3

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடந்த வாரம் கனமழை பெய்து வந்த நிலையில் அண்ணாநகர் பகுதியில் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள தடுப்பு சுவர் சரிந்து விழுந்தது . இதனை சரி செய்ய வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர் .

ஆனால் தற்போது வரை சரி செய்யாமல் மேலும் சரிந்து கற்களை கூட அகற்றாமல் நகராட்சி அதிகாரிகள்காலம் தாமதிப்பதாக கூறி குற்றச்சாட்டு எழுந்தது . இதனை அடுத்து கொடைக்கானல் பாஜக வினர் அப்பகுதியில் ஏற்பட்ட சரிவை சரி செய்யக்கோரி நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டுபூட்டுபோட்டு போராடும் முயற்சியில் ஈடுபட்டனர் .

உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த கொடைக்கானல் காவல் துறையினர் மற்றும் நகராட்சி அதிகாரிகள் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர் .

திங்கள் கிழமை பணிகள் மேற்கொள்வதாகவும் தெரிவித்த நிலையில் பாஜகவினர் கலைந்து சென்றனர். பணிகள் விரைந்து நடக்காவிட்டால் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட போவதாகவும் தெரிவித்தனர்.

## உடுமலை அருகே

# கிராமசபை கூட்டத்தை புறக்கணித்த பொதுமக்கள்; கோழிப்பன்னையை அகற்ற வீடுகளில் கருப்புகொடி கட்டி ஆர்பாட்டம்!



உடுமலை, நவ 3

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே குப்பம்பாளையம் ஊராட்சி குட்பட்ட வெள்ளை செட்டிபாளையத்தில் அம்மன் பார்ம்ஸ் என்ற தனியார் கோழிப்பன்னை செயல்பட்டு வருகிறது. ஊருக்கு நடுவே செயல்பட்டுவரும் இந்த கோழிப்பன்னையால் ஊர் முழுதும் துர்நாற்றமும் ஈக்கள் தொந்தரவும் அதிகரித்து வருவதோடு ஊர் மக்கள் அடிக்கடி நோய் வாய்ப்படுவதும் வாடிக்கையாகி வந்துள்ளது.

இந்நிலையில் இந்த பிரச்சனை குறித்து தமிழக முதல்வரிடம் நேரடியாகவும் அதிகாரிகளிடம் புகார்மனுக்களாகவும் கொடுத்த பொதுமக்கள் கொடுத்திருந்த நிலையில் சுகாதாரதுறையினர் ஆய்வு செய்து பன்னையாள் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் கோழிப்பன்னையை வேறு இடத்திற்கு மாற்றிகொள்ளவும் அதன் உரிமையாளருக்கு நோட்டீஸ் அனுப்பினர் இருப்பினும் இதுவரை கோழிப்பன்னை அங்கேயே செயல்பட்டுவருவதால் ஊரெங்கும் கருப்பு கொடி கட்டி ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட கிராமத்தினர் சிறப்பு கிராமசபை கூட்ட த்தையும் புறக்கணித்து ஊராட்சி அலுவலகத்திலே அமர்ந்து தர்ணா போராட்டத்திலும் ஈடுபட்டனர்

உரிய தீர்வு கிடைக்க வில்லையெனில் தேர்தலை புறக்கணிக்கபோவதாக் எச்சரித்த அவர்கள் கோழிப்பண்ணை அருகில் தொடர் காத்திருப்பு போராட்டம் மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

# சேதம் அடைந்த இடத்தில் வைக்கப்பட்ட பேரிகார்டு!

## தினமும் விபத்தில் சிக்கும் வாகன ஓட்டிகள்!!

சிவகாசி, நவ.3

சிவகாசி வேலாயுத ரஸ்தா ரோடு பகுதியில் சேதம் அடைந்த இடத்தில் பேரிகார்டு வைத்துள்ளதால் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்குகின்றனர். சேதமடைந்த ரோட்டை சீரமைக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். சிவகாசி சாட்சியாபுரம் மேம்பாலம் பணிகள் நடந்து வருவதை ஒட்டி வேலாயுத ரஸ்தா ரோடு முக்கிய மாற்றுப் பாதையாக உள்ளது. அனைத்து இந்த வாகனங்களும் ரோட்டில் தான் சென்று வருகின்றன. செல்ல வேண்டும். தான் ரயில்வே ஸ்டேஷன், இந்த ரோட்டை கடந்து அரசு மருத்துவமனைக்குச் இங்கு ரோடு ளது. ஆங்காங்கே சேதமடைந்துள் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா அருகே ரோடு சேதம் அடைந்து மிகப்பெரிய பள்ளமாக மாறிவிட்டது. இதனை மறைப்பதற்காக தற்காலிக மாக பேரிகார்டு வைக்கப் பட்டுள்ளது. இதனால் ரோடு குறு கிய நிலையில் டூ வீலர்கள் உள்ளது. கார் உள்ளிட்ட சென்று வருவதே சிரமமாக பெரிய வாகனங்கள் தட் டுத் தடுமாறியே செல்ல வேண்டியுள்ளது. தவிர டூவீலர்களில் இரவில் வருபவர்கள் அடிக்கடி விபத்திலும் சிக்குகின்ற னர். எனவே இப்பகுதியில் சேதம்அடைந்தரோட்டை சீரமைக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் எதிர் பார்க்கின்றனர்.



மதுரை மாவட்டம், சாலையில் கிடந்த ரூபாய் 17 லட்சம் பணத்தை மீட்டு காவல் நிலையத்தில் ஒப்படைத்த சிம்மக்கல் பகுதியில் வசித்து வரும் திருமதி.செல்வமாலினி மற்றும் அவரது மகன் செலவன் பாலமுருகன் அவர்கள் ஆகியோருக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜே. கே.பிரவீன்குமார், பொன்னடை போர்த்தி பராட்டினார்.

## மதுரையில் நடைபெற்ற கலாமின் உலக சாதனை:

# புத்தக நிகழ்வில் அபாகஸ் ஆசிரியர் சந்தியா தலைமையில் செங்கல்பட்டு மாணவ மாணவிகள் பங்கேற்பு!



செங்கல்பட்டு, நவ. 3

மதுரை கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அலங்காநல்லூர் அரங்கத்தில் நடைபெற்ற உலக சாதனை விழாவில் சர்வ தேச அறிவு கூடங்கள் மேம்பட்ட அபாகஸ் நிறுவனம் சார்பில் உலக சாதனை படைப்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் அபாகஸ் முறை கணக்கீட்டை பயன்படுத்தி 25 வரிசைகளைச் செய்தல் மனகணிதத்தில் 25 வரிசை கூட்டல்கள் 25 வினாடிகளுக்குள் 25 வரிகை கூட்டல்கள் மல்டி பாஸ்கிங் ஒரே நேரத்தில் இரண்டு விஷயங்களை 25 வரிசைகள் குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் ஐந்து வெவ்வேறு பணிகளை செய்யும்போது வேகமாக 25 வரிசைகள் அபாகஸ் மற்றும் மன கணித கணக்கீடுகள் என்ற தலைப்பில் இக்குழு உலக சாதனையை முயற்சி செய்து 1500 மேற்பட்ட பங்கேற்பா்களுடன் இக்குழு உலக சாதனை முயற்சியில் இறங்கி வெற்றிகரமாக கலாமின் உலக சாதனைகளால் அங்கீகரிக்கப்பட்டது.

இதில் குறிப்பாக செங்கல்பட்டில் இருந்து அபாகஸ் ஆசிரியர் சந்தியா தனது மாணவ மாணவிகளின் தன்னம்பிக்கையை வளர்க்கும் விதமாக சாதனையில் பங்கு கொள்ள செய்தார்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர் கூட்டரங்கில் விவசாயிகள் நலன் காக்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட வன அலுவலர் ரவி மீனா, மாவட்ட வருவாய் அலுவலர் மா.கணேஷ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பவானி, இணை இயக்குநர் (வேளாண்மை) பிரேம் சாந்தி, படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநர் காமாட்சி, மின்சார வாரிய செயற் பொறியாளர் அன்புச்செல்வன், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சிவகாசி மாநகர மாவட்ட செயலாளர் ஜே .கே. செல்வின் ஏசுதாஸ், தலைமையில் ஐயா பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118 வது பிறந்தநாள் விழா சிவகாசியில் அமைந்துள்ள அவரது திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம் நிகழ்வில் வல்லரசு, செல்வகுமார், திலீபன், செங்கோல் ராஜ், அசோக் குமார்,பைக்பாண்டியன்,தமிழ்ச்செல்வன்,தீபன்சக்கரவர்த்தி,விசிகதங்கம்,ஜோதிராஜ்,அகஸ்தியன், வேல்முருகன், குமார், தமிழ் அரசு பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



# பட்டிவீரன்பட்டி பேரூராட்சி மன்ற கூட்டம்!

வத்தலகுண்டு,நவ.3

வத்தலகுண்டு அருகே உள்ள பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் மாதாந்திர கவுன்சிலர்கள் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு பேரூராட்சி மன்ற தலைவர் சியாமளா தலைமை தாங்கினார்.

துணைத் தலைவர் கல்பனாதேவி அருண்குமார் முன்னிலை வகித்தார். செயல் அலுவலர் கோபிநாத் வரவேற்றார். கூட்டத்தில் நகர்புற பிரதமர் யோஜனா திட்டத்தின் கீழ் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை ஆய்வு செய்து பயனாளிகள் தேர்வு செய்தல்,2ம் என் ரேஷன் கடைக்கு அருகே உள்ள தண்ணீர் தொட்டியை அகற்றி விட்டு வேறு இடத்துக்கு மாற்றம் செய்தல் முத்தாய்ப்பாக 14வது வார்டு பகுதியில் 33 லட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் குடிநீர் திட்ட பணிகளை வரும் நவம்பர் மாதம் இறுதிக்குள் முடித்து தர வேண்டும் என்று உள்ளிட்ட 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் அனைத்து வார்டு கவுன்சிலர்களும் கலந்து கொண்டனர்.



## ராஜபாளையம் அருகே

# தேவதானம் சாஸ்தா கோவில் ஆற்று அருவியில் குளித்து மகிழும் சுற்றுலாப் பயணிகள்!

ராஜபாளையம் நவ 3

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே தேவதானம் மேற்கே நகரைஆறு மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகி வருகிறது.

இந்த நகரை ஆற்றில் சாஸ்தா கோவில் சோதனை சாவடியில் இருந்து 3 கிலோமீட்டர் தூரம் வரை வனத்துறையினர் வாகனம் ஏற்பாடு செய்து சுற்றுலா பயணிகளை ஏற்றி சென்று வருகின்றனர்.

இந்த ஆற்றில் சிறிது தூரம் நடந்து சென்றால் அருவி வருகிறது.

இதை ஒட்டி இடுப்பளவு தண்ணீர் இருப்பதால் சுற்றுலா பயணிகள் அங்கு குளித்து அருவியில் குளித்து மகிழ்கின்றனர்.

நாளொன்றுக்கு 200 முதல் 300 சுற்றுலா பயணிகள் வருவதாகவும் சனி, ஞாயிறு 500க்கும் மேல் வந்து செல்வதாகவும் வனத்துறையினர் தெரிவித்தனர்.

# பெயரளவிற்கு செயல்படும் திருத்தங்கல் பஸ் ஸ்டாண்ட்; பயணிகள் அதிருப்தி!

சிவகாசி, நவ.3

சிவகாசி அருகே திருத்தங்கள் பஸ் ஸ்டாண்ட் பெயர் அளவிற்கு மட்டுமே செயல்படுவதால் பயணிகள் அவதிப்படுகின்றனர். பஸ் அனைத்து பஸ்களும் ஸ்டாண்டிற்குள் வந்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். திருத்தங்கலில் விருதுநகர் ரோட்டில் 2013 ல் ரூ.3.69 கோடியில் பஸ் ஸ்டாண்ட் அமைக்கப்பட்ட 2016 ல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

பஸ் வணிக ஸ்டாண்டில் வளாகங்கள், சுகாதார வளாகங்கள், பொருட்கள் பாதுகாக்கும் அறை, டிரைவர் நடத்துனர் ஓய்வு அறை, குடிநீர் வசதி, மேல்நிலை குடிநீர் தொட்டி, உயர் கோபுர மின் விளக்குகள் என பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. சில நாட்கள் மட்டுமே பயன்பாட்டில் இருந்த ஸ்டாண்ட் அதன் பின்னர் பயன்பாட்டில் இல்லை. இந்திலையில் 10 மாதங்களுக்கு முன்பு பஸ் ஸ்டாண்ட் மீண்டும் பயன் பாட்டிற்கு கொண்டு வரப் பட்டது. இங்கு தாய்மார்கள் பாலூட்டும் அறை வணிக வளாகங்கள் குடிநீர் வசதி சுகாதார வளாக வசதி. ஓய்வு அறைகள் அனைத்தும் ஏற்படுத் தப் பட்டது.

இதனைத் தொடர்ந்து தனியார் அரசு பஸ்கள் அனைத்தும்பஸ்ஸ்டாண்டிற்குள் வந்து சென்றன. ஆனால் அதன் பின் னர் பஸ்கள் மீண்டும் பஸ் ஸ்டாண்டை புறக் கணிக்கும் நிலை ஏற் பட்டது. எப்போதாவது ஒரு சில பஸ்கள் மட்டுமே வந்து செல்கின்றன. பஸ் ஸ்டாண்டிற்குள் உள்ள வணிக வளாகங்கள் எதுவுமே பயன்பாட்டிற்குவரவில்லை.

இதனால் மக்கள் பஸ் ஸ்டாண்டிற்குள் வந்து பஸ் ஏறுவதற்கு தயாராக இல்லை.

நிர்வாகம் சார்பில் பஸ் ஸ்டாண்டிற்குள் உள்ள வணிக வளாகங்களை பயன்பாட்டிற்கு கொண்டு மாநகராட்சி வர நடவடிக்கை எடுக்க அனைத்து பஸ்களும் பஸ் ஸ்டாண்டிற்குள் வந்து வதன் மூலம் மீண்டும் பஸ் ஸ்டாண்ட் பயன் பாட்டிற்கு வர வாய்ப்பு உள்ளது.

செல்ல ஏற்பாடு செய் திருத்தங்கல்லில் பஸ்கள் வராததால் செயல்பாடின்றி உள்ள பஸ் ஸ்டாண்ட்.கமிஷனர் சரவணன் பஸ் ஸ்டாண்டில் உள்ள கடைகள் ஏலத்திற்கு விட்ட பயன்பாட்டிற் பட்டு வரப்படும் அனைத்து பஸ்களும் ப ஸ்டாண்டுக்குள் வந் செல்ல நடவடிக்கை எடுகொண்டு கப்படும். என்றார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



திருப்பத்தூர் நகரப் பகுதியில் 1 முதல் 36 வார்டுகளுக்கும்

# நலம் காக்கும் ஸ்டாலின் முகாமினை மாவட்ட ஆட்சியர் சிவ சௌந்தரவல்லி, திருப்பத்தூர் சட்டமன்ற நல்லதம்பி குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்!

திருப்பத்தூர்.நவ.3

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகரத்திற்கு உட்பட்ட பகுதியில்1 முதல் 36 வார்டுகளிலும் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமினை மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி மற்றும் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி கலந்துகொண்டு நலதிட்ட உதவிகளை வழங்கி பார்வையிட்டார்கள்

மேலும் இம்மு முகாமில் கலைஞர் நகர், அண்ணா நகர், திருமால் நகர், ஹவுசிங் போர்டு, சி கே சி நகர், காமராஜ் நகர் ,புது முத்தப்பர் தெரு, சிவனார் தெரு மற்றும் சுற்றியுள்ள 36 வார்டுகளில் உள்ள 5000 த்திக்கும் மேற்பட்டோர் பொதுமக்கள் முகாமில்கலந்து கொண்டனர்.

மேலும் இம்முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கான ரத்த மாதிரி சேகரிக்கும் மருத்துவம் மற்றும் எலும்பியல் மற்றும் நரம்பியல் மருத்துவம், மன நல மருத்துவம் காது மூக்கு தொண்டை மருத்துவம்

கர்ப்பிணி தாய்மார்களுக்கு மருத்துவம் ஆண்கள் ரத்த மாதிரி சேகரிப்பு மற்றும்இசிஜி பல் மருத்துவம் கண் மருத்துவம் குழந்தை மருத்துவம் நுரையீரல் மருத்துவம் நீரிழிவு நோய் மருத்துவம் தோல் மருத்துவம் மகப்பேறு மருத்துவம் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்று நோய் பரிசோதனை முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை வழங்குதல் இருதய மருத்துவம் ஆகிய அனைத்து மருத்துவங்களும் பொது மக்களுக்குவழங்கப்பட்டு வருகிறது. திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நலன் காக்கும் ஸ்டாலின் மருத்துவ திட்டம் ஆனது ஏழை எளிய மக்களுக்கு உருவாக்கப்பட்ட திட்டமாகும் இதை அனைத்து ஏழை எளிய மக்கள் பயனடையுமாறு கேட்டுக் கொண்டார் .

திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கூறுகையில் ஒரு இசிஜி எடுக்க வேண்டும் என்றால் கூட பணம் அதிக அளவில் செலவினமாகும் அதனை ஏழை எளிய மக்கள் ஏற்க முடியாத ஒரு தொகையாக இருக்கும் ஆகையால் இதனால் கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் நலன் காக்கும் ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்தார் அவருக்கு நம்பல் எப்பொழுதும் உறுதியாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்

நான் கக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் பயன் பெற்ற மக்கள் தமிழக முதல்வர் மற்றும் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினருக்குநன்றி தெரிவித்தனர். மேலும் திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ் ராஜேந்திரன். திருப்பத்தூர் நகர மன்ற உறுப்பினர் சங்கீதா வெங்கடேசன் . திருப்பத்தூர் நகர மன்ற துணைத் தலைவர் ஏ ஆர் சபியுல்லா

மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் சந்திரசேகரன். பொதுக்குழு உறுப்பினர் அரசு. முன்னாள் சேர் மன் நகர மன்ற உறுப்பினர்கள். மாவட்ட பொறியாளர் துணை அமைப்பாளர் பொன் நாகராஜ் என்கின்ற நாகு பிரேம் குமார். ஜீவா பார்த்திபன். கோபி. அசோக் குமார். செல்வி. மாற்றுத்திறனாளிகளுக்கான 75 வயது மதிப்புதக்குறியோருக்கு செயற்கை கால் பொருத்துவதற்கு முகாமில்பார்வையிட்டார்.

மாவட்டம் மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட மருத்துவ துறை அலுவலர் வினோத் குமார். சௌந்தரவல்லி . திருப்பத்தூர்எம் ஓ சிவக்குமார் மருத்துவர். இம்மாமில் பல்வேறு வகையான துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு முகாமில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட பர்கூர் தெற்கு ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சியில் 'உள்ளாட்சிகள் தினத்தை' முன்னிட்டு நடைபெற்ற கிராமசபா கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ்குமார் கலந்து கொண்டு பர்கூர் ஒன்றிய ஊராட்சிகளில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சி அமைந்தபிறகு, பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலும், அரசின் பல்வேறு திட்ட நிதிகளில் இருந்தும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும், கலைஞர் உரிமைத் தொகை மற்றும் மரக்கன்றுகளை மட்டும் இனிவரும் காலங்களில் செயல்படுத்த உள்ள திட்டங்களையும் சாதனைகளையும் விளக்கி சிறப்புரையாற்றினார்கள் இதில் ஊராட்சி செயலாளர் மற்றும் உள்ளாட்சி அரசுஅதிகாரிகள்மற்றும்முன்னாள்ஊராட்சிமன்றநிர்வாகிகள்உள்ளிட்டஏராளமானகட்சிநிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அலங்காநல்லூர் ஒன்றியத்தில் 37 ஊராட்சி பகுதிகளில் உள்ளாட்சி தினத்தை ஒட்டி சிறப்பு கிராம கூ ட்டம்!



அலங்காநல்லூர் நவ.3.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றிய ஊராட்சிகளில் உள்ளாட்சி தினத்தை ஒட்டி சிறப்பு கிராம கூட்டம் நடந்தது அச்சம்பட்டி ஊராட்சி செயலாளர் முருகேஸ்வரி தலைமையில் பற்றாளர் ஞானசௌந்தரி சிறப்பு உரையாற்றினார் அதே போல் 15.பி. மேட்டுப் பட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் தாய்மொழி தலைமையில் பற்றாளர் அமுதா கருத் துரை வழங்கினார் பெரிய ஊர்சேரியில் ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் முத் துக்குமார் முன்னிலையில் பற்றாளர் ரகுபதி கலந்து .கொண்டார் அதேபோல் முடுவார் பட்டி ஊராட்சி யில் நடந்த சிறப்பு கிராம கூட்டத்தில் பற்றாளர் மீனாட்சி. ஊராட்சி செய லாளர். செல்வமூர்த்தி ஏற் பாட்டில் நடந்ததது மாணிக்கம் பட்டி ஊராட் சியில் ஊராட்சி செயலா ளர் பெருச்சி.பற்றாளர் மலர்மன்னன் சுகாதார அய்வாளர் தவமணி கலந்து கொண்டார் இதில் இந்த ஊராட்சியில் பொம்மிநாயக்கன் பட்டி புகையில்லா கிராமமாக இருக்கவேண்டிதீர்மானம் நிறைவேற்றினர் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர் தொடர்ந்தசத்திர வெள்ளாளபட்டி ஊராட்சி யில் பற்றாளர் ரகுபதி. ஊராட்சி செயலாளர் பூமி நாதன். முன்னிலையில் நடந்தது.

இதுபோல் ராஜாக்கள் பட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் முத் துக்குமார். பற்றாளர் அல மேலுமங்கை கலந்து கொண்டு எடுத்துறைத் தார் கல்லணை ஊராட்சி யில் செயலாளர் ராஜாங் கம் தலைமையில். பற்றாலர் காளீஸ்வரகுமார் அடிப் படை வசதிகள் மின்சாரம் கழிவு நீர் வாய்க்கால் 100 நாள் வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் என் னென்ன வேலைகள் செய் வது என்ற தீர்மானங்கள் நிறைவேற்றினர் இது போல் அலங்காநல்லூர் ஒன்றிய 37 கிராம பஞ்சா யத்துகளிலும் கிராம சேவை கூட்டம் நடந்தது.

# கேத்தாண்டப்பட்டி கூட்டுறவு சங்கத்திற்கு புதிய கட்டிடம் வேண்டும்!

## குறைதீர்வு நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை!!

திருப்பத்தூர், நவ.03

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் விவ சாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சி யர் சிவசௌந்திரவல்லி தலைமையில் நடைபெற் றது. இந்த கூட்டத்தில் மட்ட பாலம் அமைக்க வேண்டும், கூட்டுறவு சங் கத்தின் கீழ் செயல்படும் வங்கிகளில் விவசாயிகளுக்கு கூடுதல் கடனுதவி வழங்க வேண் டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இதற்கு பதில் அளித்து பேசிய ஆட்சியர் உங்கள் கோரிக்கைகள் மீது உரிய



நாட்டறம்பள்ளி அடுத்த கேத்தாண்டப்பட்டி கூட் டுறவு சங்கத்தின் கட்டி டம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதற்கு புதிய கட்டிடம் கட்ட வேண்டும், செட் டேரி டேம் பகுதிக்கு கெலவரப்பள்ளி அணை யில் இருந்து கால்வாய் அமைத்து தண்ணீர் கொண்டு வர வேண்டும், சிம்மணபுதூர் ஊராட்சி கோடியூர் கிராமத்திற்கு செல்ல சாலை வசதி ஏற்ப டுத்தி தரவேண்டும்,

தடையின்றி மின்சாரம் வழங்க வேண்டும், ஏலகி ரிமலை பகுதியில் தனி யார் விடுதிகள் விவசாய நிலங்களில் விடும் கழிவு நீரை உடனடியாக தடுக்க வேண்டும், சிம்மணபுதூர் ஊராட்சி காமராஜர் நாடு பகுதிக்கு செல்ல ஓட் டேரி பகுதியில் உயர் விசாரணை மேற் கொண்டு உரிய நடவ டிக்கை எடுப்பதாக உறுதி யளித்தார். இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், வேளாண்மை துறை இணை இயக்குனர் ஸ்டீபன் ஜெபராஜ், மாவட்ட வன அலுவலர் மகேந்திரன் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவி யாளர் அப்துல் ரகுமான், கூட்டுறவு சங்க இணை பதிவாளர் தமிழ் மங்கை, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் தீபா, வேளாண்மை துணை இயக்குனர் சுரேஷ், மாவட்டமக்கள்தொடர்பு அலுவலர் ராஜா பிரகாஷ் மற்றும்துறை சார்ந்த அலு வலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

# பொய் சொல்லா பிள்ளையார் கோயிலில் தை மாதம் குடமுழுக்கு விழா!

திருத்துறைப்பூண்டி, நவ.3

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி பொய் சொல்லா பிள்ளை யார்கோயில்குடமுழுக்கு நடைபெற்று பன்னி ரண்டு ஆண்டுகள் ஆன நிலையில் குடமுழுக்கு செய்வதற்கான ஆலோச னைக் கூட்டம் செயல் அலுவலர் முருகையன் தலைமையில் கோயி லில் நடைபெற்றது. கூட் டத்தில் முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் ஆர்.எஸ்.பாண்டியன், முன்னாள் கவுன்சிலர் முருகேசன், காந்தி, கணே சன், வர்த்த சங்க முன் னாள் துணைச் செயலா ளர் சரவணன், முன்னாள் திருப்பணி குழு செயலா ளர் சுப்பையா, பாலசுப்பி ரமணியன் உட்பட பலர் கலந்து கொண் டனர். நேற்று கோவில் திருத்துறைப்பூண்டி நகர் மன்ற தலைவர் கவிதா பாண்டியன் உபயதாரர் தலைமையில் திருப்பணிகள் செய்வ தற்கு ஏதுவாக பாலால யம் பூஜைகள் தகட்டூர் சிவாச்சாரியர் சேகர் செய் தார். வருகின்ற தைமாதத் தில் குடமுழுக்கு செய்வ தென்றும் தீர்மானிக்கப்பட்டது. திருப்பணி வேலைகளை கோயில் நிர்வாகத்தில் இருந்தும் யாகசாலை பூஜைகளை உபயதாரர் கள் சார்பாகவும் செய்து திருப்பணியை செய்து முடிப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் சிவாச்சாரியார் பாலச்சந்திரன், கோயில் அலுவலர் நிஷாந்த் ஆகி யோர் செய்திருந்தனர்.



# திருத்தணி நகராட்சிக்கு உட்பட்ட தனியார் மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

திருத்தணி, நவ.3

திருத்தணி முருகப்பன் நகர்சாலையில் உள்ள தனி யார் மண்டபத்தில் 'உங்க ளுடன் ஸ்டாலின்' முகாம் நேற்று தனி தாசில்தார் வெண்ணிலா தலைமை யில் நடைபெற்றது. இந்த முகாமில் திருத்தணி நக ராட்சிக்கு உட்பட்ட 4 மற் றும் 6வது வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்கள் ஏரா ளமானோர் கலந்துக் கொண்டு பட்டா மாற்றம், குடும்ப அட்டை, மகளிர் உரிமைத்தொகை உள் ளிட்ட பல்வேறு மனுக் களை வழங்கினர். இந்த முகாமில், திருத் தணி எம்.எல்.ஏ., எஸ்.சந் திரன், திருத்தணி நகர் மன்ற தலைவர் சரஸ்வதி பூபதி, துணை தலைவர் சாமிராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உத விகளை வழங்கினர். இந் நிகழ்ச்சியில், நகராட்சி பணி மேற்பார்வையாளர் நாகராஜன், கவுன்சிலர் கள். ஷாம்சுந்தர். அசோக் குமார், லோகநாதன், குமு தாகணேசன், தி.மு.க., நகர .செயலாளர் வினோத் குமார், வட்ட பிரதிநிதி ஜெ. ரவி. எஸ். ரவி உள்பட அரசுதுறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன்,B.Sc,MLA,. அவர்களின் முன்னிலையில், ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் துரைமுருகன் அவர்கள், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மற்றும் பாக்கம் ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள் ரவி, சண்முகம் ஆகியோர்களின் ஏற்பாட்டில், இன்று ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றியம், பாக்கம் ஊராட்சியை சேர்ந்த தமிழக வெற்றிக் கழக இளைஞர்கள் 50க்கும் மேற்பட்டோர், நமதுதிராவிடமுன்னேற்றக்கழகத்தில்தங்களைஇணைத்துக்கொண்டனர். கழகத்தில் இணைந்த மாற்றுக்கட்சியினருக்கு ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன்,B.Sc,MLA,. கழக இரு வண்ண வேஷ்டிகளை அணிவித்து தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.



மணலூர்பேட்டை காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட தி. அத்திப்பாக்கம் வழியாக அதிக அளவில் ஹான்ஸ் கடத்தி வருவதாக கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்படை போலீசார்

தி. அத்திப்பாக்கம் பேருந்து நிறுத்தத்தில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது ஆற்கவாடிகிராமத்தைசேர்ந்தஉத்திராம்பாள்வயது49க/பெகுப்புசாமிஎன்பவரைசோதனை செய்ததில் அவரிடமிருந்து சுமார் 36 கிலோ ஹான்ஸ் கைப்பற்றி மேற்கண்ட நபரை விசாரணைக்காக மணலூர்பேட்டை காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர் இது சம்பந்தமாக மணலூர்பேட்டை காவல் உதவி ஆய்வாளர் திரு ராமதாஸ் அவர்கள் விசாரணை செய்து வருகிறார்.



இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், மகிண்டி ஊராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திவ்யான்ஷீகம், உள்ளார்.



உள்ளாட்சி தினத்தையொட்டி மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி ஒன்றியம்,மேலவளவு ஊராட்சியில் உள்ள அழகாபுரிபட்டியில் ஓவர்சீயர் மகாராஜா தலைமையில் கிராமசபை கூட்டம் நடைபெற்றது.ஊராட்சி செயலர் சுவேகம்,மற்றும் பொதுமக்கள், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# 25 26 சட்டமன்ற அறிவிப்பு எண் 41 ன் படி தொடுதிரை வசதியுடன் கூடிய தகவல் பெட்டி திறப்பு!



மயிலாப்பூர்,நவ.3

திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் அருகாமையில் உள்ள திருக்கோயில்களை அறிந்து கொள்வதற்கு வச தியாக தொடுதிரை வசதியு டன் கூடிய தகவல் பெற்று கீழ்க்கண்ட 10 திருக்கோ வில்களில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பின்படி 10 திருக்கோவில்களில் தொடுதிரை தகவல் பெட்டி வசதி செய்யப்பட் டுள்ளது. இந்து சமய அற நிலைத்துறை அமைச்சர் அவர்கள் மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோவிலில் தொடு திரை வசதியுடன் கூடிய தகவல் பெட்டியை பக்தர் களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.அதன் பிறகு அனைத்து திருக்கோ யில்களிலும் தொடுதிரை வசதியை பக்தர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.பழனி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயிலில் நடை பெற்ற இந்நிகழ்ச்சியில் திருக்கோவில் இணை ஆணையர் மாரிமுத்து பழனி நகர்மன்ற துணைத் தலைவர் கந்தசாமி நகர் மன்ற உறுப்பினர் தீனதயா ளன் பொறியாளர்கள் முத் துராஜ், குமார், பார்த்தி பன், ஸ்ரீதரன் கண்காணிப்பாளர் சீனிவா சன் உள்ளிட்ட ஏராளமா னோர் கலந்து கொண்ட னர்.



ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியில் வெற்றி தமிழர் பேரவையின் வள்ளுவர் மறை வைரமுத்து உரை கையொப்பத் திருவிழா நடந்தது இதில் கவிஞர் வைரமுத்து எம்.பிக்கள் அந்தியூர் செல்வராஜ், கே. இ .பிரகாஷ்,எம்.எல்.ஏக்கள் சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம்,நந்தா கல்வி நிறுவனங்களின் செயலாளர் கள் நந்தகுமார் பிரதீப், திருமூர்த்திமற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பரமத்தி ஒன்றியம், வீரணம்பாளையம் ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் முன்கள பணியாளர்களை நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி பாராட்டி பரிசுகளை வழங்கினார்.



தென்காசியில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தேசிய ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத் திட்டத்தின் கீழ் இரண்டு பயனாளிகளுக்கு ரூ. 78,571 மதிப்பிலான பவர் வீடர்களை மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் வழங்கினார்.

### சங்ககிரியில் பட்டப்பகலில் துணிகரம்:

## வீட்டின் பூட்டை உடைத்து 16 பவுன் நகை,பணம் கொள்ளை!



சங்ககிரி, நவ. 3

சங்ககிரிஅருகேதேவண் ணகவுண்டனூரில் வீட் டின் பூட்டை உடைத்து 16 பவுன் நகைகள் மற்றும் பணத்தை திருடிச் சென்ற மர்ம நபர்களை போலீசார் தேடிவருகின்றனர்.சேலம் மாவட்டம் சங்ககிரி அருகே தேவண்ணகவுண் டனூர்சுண்டக்காயன்காடு பகுதியைச் சேர்ந்த வெள் ளியங்கிரி என்பவரின் மனைவி மல்லிகா(52). கூலி வேலைக்கு செல் லும் இவர்வழக்கம் போல் வேலைக்கு சென்று விட்டு மாலையில் வீட்டுக்கு வந் தார். அப்போது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு வீடு திறந்து கிடந்தது. அதிர்ச்சியடைந்த அவர் வீட்டினுள் சென்று பார்த்த போது பீரோ உடைக்கப் பட்டு அதில் வைத்திருந்த தங்க மோதிரங்கள் செயின் கள், தோடுகள், தங்க காசு, கால் கொலுசுகள் ஆகிய பதினாறரை பவுன் தங்க நகைகள் மற்றும் ரொக்கப் பணம் ஐம்பதாயிரம் ஆகி யவை கொள்ளைபோனது தெரிய வந்தது.இது குறித்து அவர் சங்ககிரி போலீசில் புகார் அளித்த தையடுத்து வழக்கு பதிவு செய்த போலீசார் நகை களை திருடி சென்ற மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

### வால்பாறை அருகே

## பெண் புலி உயிரிழப்பு!

வால்பாறை, நவ.3

கோவை மாவட்டம், வால்பாறையை அடுத்த எஸ்டேட் பகுதியில் பெண் புலி உயிரிழந்தது தெரியவந்தது.

வால்பாறை சுற்று வட்டாரத்தில் வனங்களில் யானை, சிறுத்தை, காட்டெருமை, கரடி, புலி ஆகிய வன விலங்குகள் உள்ளன. இதில் புலிகள் நடமாட்டம் அடர்ந்த வனப் பகுதிகளில் மட்டுமே காணப்படும். சில நேரங்களில் வனத்தை விட்டு இரவு நேரத்தில் வெளியேறும் புலிகள் வனப் பகுதி சாலைகளைக் கடக்கும்.

இந்நிலையில் வால்பாறையை அடுத்த வில்லோனி எஸ்டேட் 12ஆம் நம்பர் தேயிலைத் தோட்ட வன எல்லையில் பெண் புலி ஒன்று இறந்துகிடப்பதை அப்பகுதியில் ரோந்துப் பணி மேற்கொண்ட வன ஊழியர்கள் வெள்ளிக்கிழமை பார்த்துள்ளனர். இது குறித்து வனச்சரக அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அங்கு சென்று பார்யிவையிட்டனர். இதில் வயது முதிர்வு காரணமாக பெண் புலி உயிரிழந்திருப்பதாகவும் சனிக்கிழமை உடற்கூறாய்வுக்கு பின் புலி இறந்ததற்கான முழு விவரம் தெரியவரும் என்றும் வால்பாறை வனச் சரக அலுவலர் சுரேஷ்கிருஷ்ணா தெரிவித்தார்.




சேலம்மாவட்டம்,கொளத்தூர்வட்டாரம்,கொளத்தூர்அரசுமகளிர்மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கானஅடையாளஅட்டையினைமாவட்டஆட்சித்தலைவர்டாக்டர். இரா.பிருந்தாதேவி வழங்கினார்கள். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் சௌண்டம்மாள் (சேலம்), மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி ஆகியோர் உள்ளனர்.

## ஓடும் வேனில் தீ விபத்து!

அவிநாசி, நவ.3–

அவிநாசி, கோவை மாவட்டம் கோவில் பாளையம் பகுதியை சேர்ந்த கிருஷ்ணன் (35) ஈச்சர் வேனில் கோயில் பாளையத்திலிருந்து பசை மாவு லோடு ஏற்றிக்கொண்டு அதனை ஈரோட்டில் இறக்கி விட்டு தொடர்ந்து தேசிய நெடுஞ் சாலை வழியே கோவில் பாளையம் நோக்கி திரும்ப வந்து கொண்டிருந்தார்



பெருமாநல்லூர் பைபாஸ் சாலை அருகே சேலம் கொச்சின் தேசிய நெடுஞ் சாலையில் வந்துகொண்டிருந்தபோது வேனின் இடதுபுறத்தில் வயரிங் இல் இருந்து ஷார்ட் சர்க்யூட் ஆகி தீ பிடித்து மலமலவென பரவியது. கேபின் முழுவதும் பரவியதால் ஓட்டுநர் வே னை நிறுத்திவிட்டு கீழே குதித்து உயிர் தப்பித்தார்.

இதையடுத்து, அருகில் இருந்த பொது மக்கள் உதவியுடன் பெருமாநல்லூர் போலீசார்மற்றும்அவிநாசிதீயணைப்புத் துறையினருக்கும் தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த அவிநாசி தீயணைப்பு துறையினர் சுமார் ஒரு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இதில் வேன் முழுவதும் தீயில் கருகி நாசமானது. இதனால் சுமார் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பெருமாநல்லூர் போலீசார் சர்வீஸ் சாலை வழியாக போக்குவரத்தை மாற்றம் செய்தனர். மேலும் தீ விபத்து குறித்து பெருமாநல்லூர் போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.




நெல்லை சந்திப்பு மதிதா இந்து மேல்நிலைப்பள்ளியில் நெல்லை மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் நடந்த விழிப்புணர்வு பேரணியை பள்ளி செயலர் ஏஎல்எஸ் சண்முகம் கொடி அசைத்து தொடங்கிவைத்தார். அருகில் லஞ்ச ஒழிப்பு ஏ.டி.எஸ்.பி. மெக்லரின் எஸ்கால் ,ஆய்வாளர் ராபின் ஞானசிங், உதவி ஆய்வாளர் முத்து கணேஷ், பள்ளி தலைமை ஆசிரியர் சோமசுந்தரம் உள்பட பலர் உள்ளனர்

### சென்னை சேப்பாக்கம் போல :

## கோவையில் ரூ.500 கோடியில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்!

**தமிழக அரசு டெண்டர் கோரியது!!**



கோவை, நவ.3

கோவை ஒண்டிப்புதூரில் சுமார் 20.72 ஏக்கரில் அமைக்கப்பட உள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் திட்டப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் டெண்டர் கோரி உள்ளது. இந்த மைதானம், பொது தனியார்பங்களிப்பு முறையில் செயல்படுத்தப்பட உள்ளது. இதில், சுமார் 30 ஆயிரம் பேர் அமர்ந்து போட்டிகளை காணும் வகையில் இருக்கைகள் அமைக்கப்படஉள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்ததாக வேகமாக வளர்ச்சி அடைந்து வரக்கூடிய ஒரு முக்கிய நகரமாக திகழ்ந்து வருகிறது. இந்த நிலையில் கடந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலின் போது தொழில்துறை அமைச்சர்டி.ஆர்.பி. ராஜா தனது எக்ஸ் வலைத்தளத்தில் ஒரு பதிவை வெளியிட்டார். அதில் கூறப்பட்டு இருந்ததாவது,

கோயம்புத்தூர் முழுவதும் பிரசாரம் செய்தபோது விளையாட்டு மீது ஆழ்ந்த ஆர்வமுள்ள பல இளைஞர்களை சந்தித்தோம். தடகளம், துப்பாக்கி சுடுதல், கார் பந்தயம், கால்பந்து, ஸ்கேட்டிங், குதிரையேற்றம்போன்றபல்வேறு விளையாட்டுகள் மற்றும் குறிப்பாக கிரிக்கெட் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகளில் கோவை இளைஞர்களின் ஆர்வம் ஈடு இணையற்றது. இது 3 தமிழ்நாடு பிரிமியர் லீக் அணிகளின் உரிமையாளர்களின் தாயகமாகும்.

அரசு தனியார் பங்களிப்பு முறையில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும். 20.72 ஏக்கர் பரப்பளவில் மைதானமும் 10 ஏக்கரில் வணிக வளாகம் வளாகமும் அமைக்கப்படுகிறது.இந்த மைதானம் பகல் மற்றும் இரவு போட்டிகள் நடத்தப்படும் வகையிலும் , பல்வேறு பெரிய இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படும் வகையிலும் அமைக்கப்பட இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சுமார் 30 ஆயிரம் பேர் அமர்ந்து போட்டிகளை ரசிக்கக்கூடிய வகையில் இருக்கைகள் இருக்கும் என சொல்லப்படுகிறது. 500 கோடி ரூபாய் முதலீட்டில் 2027 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த மைதானம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.



ஈரோடு, சித்தோடு, டெக்ஸ்வேலி வளாகத்தில், தமிழ்நாடு மாநில அளவிலான கராத்தே சோதனை தேர்வு போட்டியினை ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி துவக்கிவைத்து, பார்வையிட்டார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.



கோயம்புத்தூர் கிறிஸ்துமஸ் விழாவிற்கு தயாரிக்கப்படும் கேக்குகளுக்கான மூலப் பொருள்கள் கலக்கும் திருவிழா கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் சாய்பாபா கோவில் எதிரில் அமைந்துள்ள எம் இன் ஹோட்டலில் நடைபெற்றது.

## கோவையில் கிறிஸ்துமஸ் கேக் கலவை கலக்கும் திருவிழா!

கோயம்புத்தூர்,நவ.3–

கிறிஸ்துமஸ் விழாவிற்கு தயாரிக்கப்படும் கேக்களுக்கான மூலப் பொருள்கள் கலக்கும் திருவிழா கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் சாய்பாபா கோவில் எதிரில் அமைந்துள்ள எம் இன் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு எம் இன் ஹோட்டலின் தலைமை செப் ராஜா தலைமை வகித்து, கேக் கலவை கலக்கும் விழாவை துவக்கி வைத்தார்.

இதுகுறித்து கோவை எம் இன் ஹோட்டல் பொது மேலாளர் ஆர். சுசின் கூறியதாவது :–

கிறிஸ்துமஸ் விழாவிற்காக கேக் கலக்கும் விழாவானது உலகெங்கும் நடைபெறும் பாரம்பரிய திருவிழாவாக கருதப்படுகிறது. அத்தகைய சிறப்பு வாய்ந்த விழாவை எங்களின் எம் இன் ஹோட்டல் கோயம்புத்தூர் நடத்துவதில் நாங்கள் பெருமை அடைகிறோம். விழாவில் பங்கேற்பவர்கள் அனைவரும் மகழ்ச்சி அடைவர் என நம்புகிறோம் என்றார். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக மார்டின் குரூப் ஆஃப் கம்பெனிஸ், இயக்குனர் மற்றும் சர்வதேச ரோட்டரி 3206ன் உதவி ஆளுனர் ரோட்டேரியன். எகேஆர் எப்சி. டாக்டர். லீமா ரோஸ் மார்டின் கலந்து கொண்டார்.

### கார் ஓட்டுநர் எரித்துக்கொலை:

## காரமடை தி.மு.க. கவுன்சிலர், 2 மகன்கள் கைது!

மேட்டுப்பாளையம்,நவ.3–



சரண்குமார்





மணிகண்டன்



கொலை செய்யப்பட்டவர்

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் அலாவுதீன் இவர் மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் உள்ள கார் ஸ்டான்டில் கார் வைத்து வாடகைக்கு ஓட்டி வருகிறார் இவர் கடந்த ஓராண்டாக காணாமல் போன நிலையில் அது குறித்து அவரது குடும்பத்தினர் மேட்டுப்பாளையம் காவல்நிலையத்தில் புகார் செய்தனர் அது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து தேடி வந்த நிலையில் அவரை எங்கு தேடியும் கிடைக்கவில்லை இந்த நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு மேட்டுப்பாளையத்தில் சிறுமுகை சாலையில் தனது அண்ணனை காணவில்லை எனது அண்ணியுடன் நீ தவறான முறையில் தொடர்பு வைத்துள்ளாய் இதனால் என் அண்ணன் அலாவுதீன் காணாமல் போய்விட்டார்உன்னைதீர்த்து கட்டாமல் விட மாட்டேன் என அலாவுதீன் தம்பி ஹாரீஸ் சிறுமுகை சாலையில் உள்ள ஹக்கீம் என்பவரை கத்தியால் குத்திக் கொலை செய்ய முயன்ற நிலையில் அவர் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

இந்த சம்பவத்தின் அடிப்படையில் ஹாரீஸ் மற்றும் ஹக்கீம் ஆகியோரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் ஒரு கொலை சம்பவம் ஓராண்டாற்கு பிறகு வெளிச்சத்திற்கு வந்துள்ளது. ஹக்கீம் கொடுத்த தகவலின் பேரில் அலாவுதீன் பேருந்து நிலையத்தில் கார் ஓட்டும் போது ஒரு பெண்ணுடன் தகாத உறவு இருந்தது. அதனை விசாரித்தால் உண்மை தெரிய வாய்ப்புள்ளதாக அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் போலீசார் நடத்திய விசாரணையில் ஒரு ஆளும் கட்சி கவுன்சிலர் அவரது மகன்களுடன் சேர்ந்து அலாவதீனை கொலை செய்தது தெரியவந்துள்ளது. அலாவுதீன் மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் கார் ஓட்டும் போது அங்கு செல்போன் கடை வைத்து நடத்தி வந்த காரமடை நகராட்சி திமுக 3வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ரவிக்குமார் என்பவரின் இரண்டாவது மகன் சரண்குமார் என்பவரின் மனைவியுடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இருவரும் சேர்ந்து பழகி வந்ததுடன் இருவருக்கும் தகாத உறவு ஏற்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாக இந்த கதை தொடர்ந்து வந்த நிலையில் ஒரு கட்டத்தில் இந்த கள்ளத் தொடர்பு சரண்குமாருக்கு தெரியவந்தது இதனால் ஆத்திரமடைந்த அவர் மனைவியை கண்டித்துள்ளார்.

இதன் காரணமாக இவரது மனைவி கோபித்து கொண்டு தனது அம்மாவீடு உள்ள கர்நாடகா மாநிலத்தில் உள்ள மங்களூர் பகுதிக்கு சென்றுள்ளார். இதனையடுத்து அலாவுதீனை தீர்த்து கட்ட நினைத்து நைசாக பேசி அலாவுதினை வரவழைத்த திமுக கவுன்சிலர் ரவிக்குமார் மற்றும் அவரது மகன்கள் சரண்குமார், மணிகண்டன் ஆகிய மூவரும் சேர்ந்து அடித்து கொலை செய்துள்ளனர்.

பின்னர் உடலை எடுத்து சென்று மாதேஸ்வரன் மலை கோவில் பின்புறம் உள்ள புதர் குப்பைகளை கொட்டும் இடத்தில் வைத்து தீயிட்டு எரித்து விட்டு தங்களது இயல்பான வாழ்க்கையை நடத்தியுள்ளனர். மேலும் கர்நாடகாவில் இருந்து தனது மனைவியை அழைத்து வந்து சரண்குமார் வாழ்ந்து வந்ததும் தெரியவந்துள்ளது. இதனையடுத்து மேட்டுப்பாளையம் காவல் ஆய்வாளர் சின்னகாமணன்,உதவி ஆய்வாளர் ஆனந்தகுமார் மற்றும் போலீசார் தற்போது காரமடை திமுக நகர் மன்ற உறுப்பினர் ரவிக்குமார் மற்றும் அவரது மகன்கள் சரண்குமார், மணிகண்டன் ஆகிய மூவரையும் கைது செய்து நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். கைது செய்யப்பட்ட மணிகண்டன் திமுக இளைஞரணி பொறுப்பில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் எரிக்கப்பட்ட அலாவுதீன் உடல் பாக எழும்புகளை சேகரித்து ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார்கள்ளத்தொடர்பு காரணமாக நடைபெற்ற இந்த கொலை சம்பவம் மேட்டுப்பாளையம் பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.